## *01.04.2016:-*'இறைவனின் இரக்கம், மற்றனைத்தையும் விட மிகப்பெரியது'



'மிகக்கடினமான, துன்பம் நிறைந்த வேளைகளிலும், இறைவனின் இரக்கமும், நன்மைத்தனமும் மற்றனைத்தையும்விட மிகப்பெரியது' என, இச்சனிக்கிழமை, தன் டுவிட்டர் பக்கத்தில் எழுதியுள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

இதேநாளில், ஆயர்கள் பேராயத்தின் தலைவர் கர்தினால் *Marc Armand Ouellet* அவர்களையும், ஒன்றிணைந்த மனித வளர்ச்சி திருப்பீட அவையின் தலைவர், கர்தினால் பீட்டர் டர்க்சன் அவர்களையும், திருப்பீடத்தில் தனித்தனியே சந்தித்து உரையாடினார், திருத்தந்தை பிரான்சிஸ். மேலும், ஜெர்மனியின் *Kevalaer* எனுமிடத்தில் அமைந்துள்ள அன்னை மரியா திருத்தலத்தில், வரும் ஜூன் மாதம் 3ம் தேதி நடைபெறவிருக்கும் 375வது ஆண்டு கொண்டாட்டங்களுக்கு, தன் பிரதிநிதியாக, கர்தினால் *Karl-Josef Rauber* அவர்களை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நியமித்துள்ளார்.

ஆதாரம் : வத்திக்கான் வானொலி